## 3. இறையாட்சியைப் பின்பற்றி நல்வாழ்வு வாழ்வர்


# 10 நாம் பொறுப்புடன் இறையாட்சிக்காக உழைப்போம்

### இறையரசின் தேவை

2000 வருடங்களுக்கு முன்னர் யூத இன மக்கள் உரோமைய பேரரசர்களால் ஆட்சி செய்யப்பட்டனர். இவர்கள் பல்வேறு வகைகளில் ஒடுக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுத் துன்புறுத்தப்பட்டனர். தம்முடைய விடுதலைக்காக ஆண்டவரிடம் மன்றாடினர். மெசியா என்னும் இரட்சகர் தோன்றி நமக்கு வேண்டிய விடுதலையைப் பெற்றுத் தருவார் என பல வருடங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

அவர்களுடைய மன்றாடாலைக் கேட்டு கடவுள் தம்முடைய ஒரேபேறான திருமகன் இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்பினார்.

*யோவான் 3:16*
*தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலை வாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்.*



நாம் மீட்பை அடைவதற்காக இயேசு கடவுளுக்குரிய மேன்மைகளைத் துறந்தார். நமக்காக மானிடராய் பிறந்து இறையரசை பூமியில் நிலை நாட்டுவதற்கென தனது திருப்பணியை ஆரம்பித்தார். எனினும் இவ்வாறான இறையரசு யூதர் எதிர்பார்த்ததைவிட பல்வேறு முறைகளில் வேறுபட்டதாயிருந்தது.

**இறையாட்சி என்பது முழு உலகில் கடவுளின் விருப்பத்தின்படி நடைபெறும் ஆளுகை ஆகும்.**

இங்கு கடவுள் மாத்திரமே நம்மை ஆட்சி செய்வார். நாம் அவரது பிரசைகள் ஆவோம். இறையாட்சியில் அன்பு, சமாதானம், நீதி போன்றவை நிலவும்.

இறையரசு இயேசுவினால் ஆரம்பிக்கப்பட்டு சுயநலம், பொறாமை, வன்முறை போன்ற தீய பண்புகள் நீக்கப்படுவதுடன் இவ்வரசு இயேசுவின் இரண்டாம் வருகையிலேயே முற்றிலும் நிறைவுபெறும்.


**இறையரசைப் பரவச் செய்தல்**

ஆண்டவர் இயேசு தனது திருப்பணியின்போது போதனைகளின் மூலமும், தனது வாழ்க்கை முறை மூலமும், வல்ல செயல்களின் மூலமும், இறையரசின் நல் விழுமியங்களை எடுத்துரைத்தார்.


ஆண்டவர் இயேசு அன்பும், இரக்கமும் உடையவர். அவர் தனது திருப்பணியின் போது நோய்களைக் குணமாக்கினார். பாவங்களை மன்னித்தார், தேவைகளைச் சந்தித்தார். மரணத்திலிருந்து உயிர் அளித்தார். இவ்வாறு ஒடுக்கப்படுவோரையும், வேதனைப்படுவோரையும் கண்டு அவர்களது தேவைகளைச் சந்தித்தார்.

**இயேசு இறையரசின் அடையாளமாக உடல், உள தேவைகளைச் சந்தித்தல்.**


| இறையரசின் அடையாளம் | இயேசு செய்தவை |
|---|---|
| 1. நோய்களைக் குணப்படுத்தல் | தொழுநோயாளனைக் குணப்படுத்தல். **மாற்கு 1 : 40-45** |
| 2. பேய் துரத்துதல் | தீய ஆவி பிடித்தவரைக் குணமாக்குதல். **மாற்கு 1:23-27** |
| 3. இறந்தவர்களை உயிர்ப்பித்தல் | தொழுகைக் கூட தலைவரின் மகளை உயிருடன் எழுப்புதல் **மாற்கு 5:35-43** |
| 4. இயற்கைக்கு மேலான அதிகாரம் | காற்றையும் கடலையும் அடக்குதல். **மாற்கு 4: 35-41** |



விதவையின் மகனை உயிரோடு எழுப்புதல்.




குஷ்டரோகியை குணமாக்கல்.




காற்றையும் கடலையும் அடக்குதல்.


| இறையரசின் பிரசைகளுக்கு இருக்கவேண்டிய குணாதிசயங்கள் | இயேசு காண்பித்த முன் உதாரணம் | திருவிவிலிய பகுதி | நாம் கற்றுக்கொள்வது |
|---|---|---|---|
| 1. மன்னிப்பு | தம்மைச் சிலுவையில் அறைந்தவர்களை மன்னித்தார். | லூக்கா 23:34 | மன்னிப்பு எல்லையற்றது. |
| 2 அன்பு | இயேசு சிறுபிள்ளைகளை ஆசீர்வதித்தார். | மத்தேயு 19:13 | நாமும் அவரைப்போல அன்பு உடையவராய் இருத்தல் வேண்டும். |
| 3. தாழ்மை | சீடரின் கால்களைக் கழுவினார். | யோவான் 13:4-16 | மற்றவர்களுக்குச் சேவை செய்ய நம்மை அர்ப்பணித்தல். |
| 4. இறைவனுடன் எப்பொழுதும் தொடர்பு கொள்ளல். | இயேசு சீடர்களைத் தெரிவுசெய்யும் போது செபித்தார். | லூக்கா 6:12 | எல்லாக் காரியங்களையும் தெரிவுசெய்யும் முன்பு இறைசித்தத்தை அறிதல். |



சீடர்களின் கால்களைக் கழுவுதல்.



இயேசு செபிக்கின்றார்.



தம்மைச் சிலுவையில் அறைந்த கள்வரை இயேசு மன்னித்தல்.


இறையாட்சி அன்பு, நீதி, சமாதானம் நிலவும் ஒன்றாக இருக்கிறது என்பதை இயேசுவின் வாழ்விலிருந்து அறிந்துகொள்கின்றோம்.

### ஓய்வு நாளில் சூம்பிய கையுடையவரைக் குணமாக்கல்

ஒரு நாள் கூட இறையாட்சியில் எவரும் உடல் நலமற்றவர்களாக இருப்பது இயேசு தனது சித்தமல்ல எனக் காண்பித்தார். இதற்கு உதாரணமாக சூம்பிய கையுள்ளவரைக் குணமாக்கினார். இதனால் மக்கள் எல்லோரும் இயேசுவை ஏற்று அவரின் சமூகத்தினர் ஆயினர். சுயநலமிக்க மறைநூல் அறிஞரும் பரிசேயரும் இயேசுவின் இறையாட்சி பற்றிய போதனையை எதிர்த்தனர். இயேசுவின் மீது வீணான குற்றங்களை சுமத்தி சிலுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தனர். ஆனாலும் ஆண்டவர் இயேசு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து இறையாட்சியை தீமை செய்வோரால் அழிக்கமுடியாது என்பதை வெளிப்படுத்தினார்.

இறையாட்சி மூலம் மனுக்குலம் நிறைவடைய நற்போதனை செய்து தம் வாழ்வை அர்ப்பணித்த இயேசு, இன்று நம்மையும் அவ்வாறான பணிக்கு அழைக்கிறார். தனிப்பட்டவராக, குடும்பமாக, சமுதாயமாக வாழ்வில் இறையாட்சிக்கு சான்று பகரும் சீடராவோம்.

*இறையரசை இப்பூமியில் நிறுவ நீர் ஆயத்தமா?*




*இறையரசின் போதனையை உலகெங்கும் பறைசாற்றிடுவோம்.*





## நாம் கற்றுக்கொண்டவை

1. இறையாட்சி என்பது கடவுளின் விருப்பத்தின்படி நடைபெறும் ஆளுகை அல்லது கடவுள் நம்மை ஆட்சி செய்கிறார் என்பதாகும்.

2. போதனை, வாழ்க்கைமுறை, புதுமைகள், உவமைகள் மூலம் இறையரசை பரவச் செய்தார்.

3. இயேசுவின் இறையாட்சி அன்பு, இரக்கம், மன்னிப்பு ,நீதி போன்ற நற்பண்புகளைத் தன்னகத்தே கொண்டது.

4. இயேசு சிலுவையில் மரித்து உயிர்த்தெழுந்ததன் மூலம் கட்டியெழுப்பிய இறையரசை அழிக்க முடியாது.

5. இறையரசின் நிறைவு இயேசுவின் இரண்டாம் வருகையிலாகும்.

6. இறையரசு பற்றி தனிப்பட்டவர்களாக, குடும்பங்களாக, சமுதாயமாக நாட்டுக்கு சாட்சி பகரும் நற்சீடராவோம்.

## செயற்பாடு

1. மாணவராகிய நீங்கள் இறையரசைக் கட்டியெழுப்பும் பொறுப்பை எவ்வாறு மேற்கொள்ளலாம் என சக மாணவருடன் கலந்துரையாடுக.

2. இறையாட்சிக்கும், ஏனைய ஆட்சி முறைகளுக்கும் இடையில் காணப்படும் வேறுபாடுகள் யாவை?

3. பின்வரும் திருவிவிலியப் பகுதிகளை வாசித்து இயேசு எவ்வாறான புதுமைகள் செய்தார் என எழுதுங்கள்.
   லூக்கா 5: 12-16    லூக்கா 8:22-25    மாற்கு 10:46-52

4. பின்வரும் நற்செய்திப் பகுதியினை வாசித்துஇறையாட்சியில் பங்கு கொள்ள எப்படியான பண்புகள் தேவை என்பதைப் பற்றி குழுவாக கலந்துரையாடுக.
   - மத்தேயு 18:1-4
   - மத்தேயு 13:14
   - மத்தேயு 5: 20
   - மத்தேயு 25:34